ஏர் 9 • உழவு 06 • திருவள்ளுவர் ஆண்டு 2055
விலை ரூ.20/- • ஜூன் 2024 (வைகாசி - ஆனி)

# சென்னை கொங்கு நண்பர்கள் மலர்

பதிவு எண். : 44/2016

பதிப்பாளர் :
கொங்கு நண்பர்கள் சங்கம். வெள்ளி விழா இல்லம்,
எண் : 34, சீனிவாசப் பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை– 600 014. செல் : 63839 85919
மின்னஞ்சல் : chennaikongu@gmail.com
இணையதளம் : www.kongunanbargalsangam.com


| | | |
|---|---|---|
| தலைவர் | : | கே.கே.ரமேஷ் |
| துணைத்தலைவர்கள் | : | வீ.க.செல்வக்குமார் |
| | : | வி.பி.வீரப்பன் |
| செயலாளர் | : | எம்.அமராபதி |
| பொருளாளர் | : | வீ.ஆர்.பாலசுப்பிரமணியன் |
| இணைச்செயலாளர்கள் | : | சி.அரவிந்தன் |
| | : | பி.ரவி |
| தணிக்கையாளர் | : | ஆர்.பாலசந்திரன் |

**செயற்குழு உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| எம்.பொன்னுசாமி | சி.கொங்குவேள் |
| கே.சந்திரமோகன் | எஸ்.சீனிவாசன் |
| டத்தோ எஸ்.பிரகதீஷ்குமார் | விசா எம்.சண்முகம் |
| பி.வி.கல்யாணசுந்தரம் | டி.எஸ்.சந்திரசேகர் |
| டாக்டர் எஸ்.ராஜாமணி | எஸ்.ஜெகநாதன் |
| கே.ஜெகதீசன் | கே.நித்தியானந்தன் |
| ஆர்.சண்முகவேல் | ஆர்.கந்தகார்த்திக் |
| கே.கே.முருகன் | பி.பிரேம்குமார் |
| | சாந்தி சிவசண்முகம் |


**Published by :**
K.K.Ramesh on behalf of
Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam,
No:34 Srinivasa Perumal Sannathi 1st St,
Royapettah, Chennai 600014.

**Printed by** :
A.Sheik Dawood, Dawood Graphics,
No.63,Muthu Mudali St, Royapettah, Chennai-600 014.

**Editor K.K.Ramesh**



*மாவீரன் தீரன் சின்னமலை*

## ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# தலையங்கம்

அன்பு கொங்குச் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்,

நம், வாழும் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றுவது கல்வியே! என்ற கவிதைக்கேற்ப நமது கொங்கு இனத்தில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் சிறந்த மதிப்பெண்களைப்பெற்ற செல்வன் செல்விகளுக்கு நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பாக நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை அகமகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கொங்கு இனத்தின் செல்வன் செல்விகள் மேற்படிப்பிற்கு மற்றும் பணி சம்பந்தமாக சென்னைக்கு வருபவர்களுக்கு நமது சென்னை, இராயப்பேட்டையில் அமைந்துள்ள மாணவர்களுக்கான தங்கும் விடுதி 'வெள்ளி விழா' இல்லமும், மாணவிகளுக்கான 'கொங்கு நாடு இல்லம்' புதிய தோற்றத்துடன் அமைந்துள்ளது. அதனை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

"தொலைத்த விண்மீன்கள் கூட்டமாய்
ஊர்வலம் சென்றனர்"

சென்னை கொங்கு சங்கத்தின் திருவிழா!

இதுவே நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் குடும்பவிழாவாம்!

உலகில் நடைபெறும் உற்சாகமான விழாக்களில் ஒன்றான சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் குடும்பவிழா உணர்வு பூர்வமாக ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடைப்பெற்று வருகின்றது. அந்த வகையில் இவ்வாண்டும் ஜூலை 28ம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை சென்னை, தேனாம்பேட்டை, காமராஜர் அரங்கில் கோலாகாலமாக நடைபெற உள்ளது.

இந்த விழாவில் சமுதாயத்திற் காகவும், நாட்டிற்காகவும், உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் சார்ந்த கொங்கு தொழில்நுட்பத் துறைகளிலும் பல்வேறு சாதனைகள் புரியும் செம்மல்களுக்கு பல்வேறு விருதுகளை கொங்கு நண்பர்கள் சங்கம் வழங்கி சிறப்பிக்க உள்ளது.

இந்த ஒப்பற்ற நிகழ்ச்சியில் வெளிநாட்டில் வாழும் கொங்கு சமுதாயத்தினருக்கு இணையதளத்தின் வழியாகவும் chennaikongunanbargalsanga3853 மற்றும் www.youtube.com/@sivad3494 ஒளிப்பரப்ப இருகின்றது. அதுமட்டுமின்றி நம் ஊர் உறவினர்கள் குடும்பத்துடன் முக்கியமாக குழந்தைகளுடன் நேரடியாகக் கலந்துக்கொண்டு விழாவினை சிறப்பிக்க வேண்டும். நமது எதிர்கால வாரிசுகளுக்கு சமூக உணர்வையும், பன்பாடுகளையும் மேம்படுத்தி அறியவதற்கும் இவ்விழாவில் கலந்துக்கொண்டு விழாவை சிறப்பிப்போம்.

இதுமட்டுமின்றி விழாவிற்கு வருகைப்புரியும் அனைத்து சொந்தங்களுக்கும் காலை, மதியம் சைவம் மற்றும் அசைவம் கொங்கு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இத்தகைய சிறப்புகளையும் உள்ளடக்கிய உலக கொங்கு இனத்தின் திருவிழாவில் சொந்தங்கள் அவசியம் வருகைப்புரிய வேண்டும் என்று அன்புடன் அழைக்கின்றேன்.

இதுவரை கேட்டவுடன் விளம்பரம் கொடுத்த சொந்தங்களுக்கு நன்றிகள் பல. தாங்கள் சங்கத்தின் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. கொங்கு இனம் வாழ்க! கொங்கு சங்கங்கள் வாழ்க!

மேலும், இதுவரை தாங்கள் விளம்பரத்தையும், நன்கொடையும் அளித்திடா உறவுகள் இம்மாதமே சென்னை கொங்கு

குடும்பவிழாவிற்கு மனமுவந்து கொடுக்கும்படி தாங்கள் அளிக்கும் நன்கொடை விழா சிறப்பாக நடைபெறுவதற்கும் மற்றும் சமுதாயப் பணியாற்றுவதற்கு மிகவும் உதவிகரமாக இருந்தது. அதேபோல் இந்த வருடமும் தங்களுக்கு தெரிந்த உறவுகளிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் நிறுவன விளம்பரங்களை தந்து நிதி வழங்கியும் ஊக்குவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் குழந்தைகள் விழா மற்றும் விளையாட்டு விழா இவ்வாண்டு ஜூலை 21 ஆம் நாள் காலை 11.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விளையாட்டு விழாவில் நம் கொங்கு இனத்தைச்சேர்ந்த தேசிய விளையாட்டு வீரர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைத்திருக்கிறோம். இவ்விழாவில் நமது கொங்கு சொந்தங்கள் கலந்துக்கொண்டும், முக்கியமாக இளைய சமுதாயத்தினர் கலந்துக்கொண்டும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தி பரிசுகளையும் பெற்று மற்றும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து நம் கொங்கு இனம் ஒற்றுமை பெருகிடவும் விளையாட்டு மற்றும் குழந்தைகள் விழாவை சிறப்பிக்கவும் அனைத்து கொங்கு சொந்தங்களையும் அன்போடு அழைக்கிறேன்.

இவ்விழாவில் கலந்துகொண்டு தங்கள் செல்வன் செல்விகளுக்கு திருமணம் பதிவேற்றம் நடத்திடவும் நேரில் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திக் கொள்வதற்கு சிறந்த வாய்ப்பாக இருக்கும். மற்றும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தில் உறுப்பினராக விரும்பும் சொந்தங்களுக்கு பதிவேற்றமும் அந்நாளில் நடைபெற உள்ளது. இந்த இனிய நாளில் விளையாட்டு விழாவில் வருகைப்புரியும் அனைத்து சொந்தங்களுக்கும் கொங்கு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நமது குடும்பவிழாவிற்கு அனைத்து பகுதியில் இருக்கும் கொங்கு சங்கத்தின் தலைவர்களையும், செயற்குழு உறுப்பினர்களையும் மற்றும் உறுப்பினர்களையும் அழைத்துள்ளோம். இதைப்படிக்கும் நமது உறுப்பினர்கள் தாங்கள் இருக்கும் பகுதியில் உள்ள மற்றும் தங்களுக்கு தெரிந்த கொங்கு சங்கத்தின் விவரங்களையும், விலாசத்தையும் கீழேக்கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் வழியாக தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

'இது நமது குடும்பவிழா' விழாச்செய்தியை அறிந்தவுடன் மற்றும் அனைத்து சொந்தங்களும் விழாவில் கலந்துக்கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். தாங்கள் அனுப்பும் விபரங்களை கிடைத்தவுடன் விழாவிற்கு அன்புடன் அழைக்க விரும்புகிறோம்.

நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினர்களின் கவனத்திற்கு மாதந்தோறும் நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திலிருந்து மாத மலர் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதில் சுமார் 400 புத்தகங்கள் விலாசம் மற்றும் அலைபேசி எண். தவறாக இருப்பதாலும், சங்கத்திற்கு திரும்ப வந்துவிடுகிறது. ஆகையால் உறுப்பினர்கள் இந்த மலரில் படிவம் இணைத்துள்ளது. அதனை சரியான விவரங்களைப் பூர்த்தி செய்து சங்கத்திற்கு அனுப்பு வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!



**கே.கே.ரமேஷ்**
தலைவர்
செல் : 98410 76117

Office : Mobile : 63839 85919
Email : chennaikongu@gmail.com

கேட்டவுடன் விளம்பரம் கொடுத்த சொந்தங்கள் சங்கத்தின்
மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.
கொங்கு இனம் வாழ்க! கொங்கு சங்கங்கள் வாழ்க!

# நன்கொடை வேண்டுதல்

## சென்னை கொங்கு குடும்பவிழா மற்றும் விளையாட்டு விழா - 2024

நமது கொங்கு சொந்தங்கள் சங்கமிக்கும் இந்த மாபெரும் திருவிழாவாம் நமது உறவுகள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சென்னை கொங்கு விளையாட்டு விழாவையும், குடும்பவிழாவையும், சுமார் 5000 உறுப்பினர்களும், 18 ஆயிரம் சொந்தங்களும் இணையத்தளத்தின் வாயிலாக கலந்துக்கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

இன்னும் ஒரு மாதம் இருப்பதால் சொந்தங்களும் நண்பர்களும் நன்கொடை வேண்டுதல் பார்த்து தங்களது நிறுவனத்தின் விளம்பரத்தை பக்கவாட்டில் இருக்கும் படிவத்தில் விளம்பரத்தொகையைத் தேர்ந்தெடுத்து சமுதாயக்கடமையை ஆற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இந்த வருடமும் தங்களுடைய நிறுவன விளம்பரங்களை தந்து நிதி வழங்கியும் ஊக்குவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சொந்தங்கள் அனைவரும் வருகின்ற 28–07–2024 தேதிக்குள் தங்களது நிறுவனத்தின் விளம்பரச்செய்தியையும், நன்கொடையையும் சங்கத்தின் விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மிக்க நன்றி

குறிப்பு : NEFT (or) RTGS முறையில் அனுப்ப கீழ்க்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் அனுப்பும் NEFT (or) RTGS விவரங்களை சங்கத்திற்கு உங்கள் நிறுவனத்தின் பெயரோடு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**Bank Details :-**

| | |
|---|---|
| NAME | : KONGU NANBARGAL SANGAM |
| BANK | : Punjab National Bank |
| BRANCH | : KODAMBAKKAM |
| A/C NO | : 10852011000060. |
| IFSC | : PUNB0108510 |

மலர்குழுவினர் மற்றும் விழாக்குழுவினர்

chennaikongu@gmail.com
www.chennaikongunanbargalsangam
www.youtube.com/@sivad3494
63839 85919

# குடும்ப விழாச் சிறப்பு மலர் 2024

பெறுநர்
**குடும்ப விழா மலர்க்குழு**
**கொங்கு நண்பர்கள் சங்கம்,**
"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
Ph : 044-43510460, Cell : 63839 85919
Email : chennaikongu@gmail.com

அன்புடையீர், வணக்கம்

குறிப்பிட்டுள்ள விளம்பர விவரத்தை 2024 ஆம் ஆண்டுக் குடும்ப விழாச் சிறப்பு மலரில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். விளம்பர விவரத்தை இத்துடன் இணைத்துள்ளோம்.

Advt. Size : 210x150 mm

| | | | |
|---|---|---|---|
| பின்பக்கம் | (வண்ணத்தில்) | ரூ.1,25,000 | ☐ |
| முன் அட்டை (உள்பகுதி) | (வண்ணத்தில்) | ரூ.1,00,000 | ☐ |
| பின் அட்டை (உள்பகுதி) | (வண்ணத்தில்) | ரூ.1,00,000 | ☐ |
| முழுப் பக்கம் ஆர்ட் பேப்பர் | (வண்ணத்தில்) | ரூ.25,000 | ☐ |
| முழுப் பக்கம் | (கருப்பு வெள்ளை) | ரூ.10,000 | ☐ |
| அரைப் பக்கம் | (கருப்பு வெள்ளை) | ரூ.5,000 | ☐ |
| Stall | (Size 3x5) | ரூ.5,000 | ☐ |

Advertisement
Format
PDF (or) JPEG

விளம்பரச்செய்தி : விளம்பரத்திற்குண்டான தொகை ரூ. ........................................ஆன காசோலை / வரைவோலை எண்................................ தேதி..................... வங்கியில் எடுத்து இத்துடன் இணைத்துள்ளோம்.

## அனுப்புநர்

NAME :

Address :

Cell :
Email ID :

குறிப்பு : NEFT (or) RTGS முறையில் அனுப்ப கீழ்க்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.
நீங்கள் அனுப்பும் NEFT (or) RTGS விவரங்களை சங்கத்திற்கு உங்கள் நிறுவனத்தின் பெயரோடு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**Bank Details :-**

| | |
|---|---|
| NAME | : KONGU NANBARGAL SANGAM |
| BANK | : Punjab National Bank |
| BRANCH | : KODAMBAKKAM |
| A/C NO | : 10852011000060. |
| IFSC | : PUNB0108510 |

தங்களுடைய நிறுவனத்தின் விளம்பரச்செய்தியை இந்தப் படிவத்துடன் இணைக்கவும்.
மேலும் மின்னஞ்சல் chennaikongu@gmail.com வழியாகவும் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

.................................................
கையொப்பம்

* 80 G Exemption available



# இயற்கையின் பாதையில்

அ.பாலசுப்ரமணியன், ஈரோடு

இதமான காற்றுச் சூழல், அவளான வெப்பம், சரியான பருவகால நிலை போன்றவையே மனித உடலை மட்டுமல்ல இரத்தப் பூமியையே பாதுகாக்கும் காரணிகளாகும். தாவரம் நிறைந்த இதமான காற்றுச் சூழலில் அதிகமான ஆக்ஸிஜன் இருக்கும். மனிதன் மற்றும் விலங்குகளின் வாழ்வும் அதிக ஆயுள் பெற்றிருக்கும். அளவான வெப்பம் ஒன்றே இந்த உடல் ஆரோக்கியத்தையும் இதை போல பூமிப் பந்தின் ஆரோக்கியத்தையும் கட்டிக் காப்பதாகும். பருவநிலை மாற்றங்கள் நிர்ணயம் செய்ய முடியாத அளவு இருக்கும்பொழுது, தாவர இனங்களும் மற்றும் விளைச்சல்தரும் பயிர்களும் வளர்ச்சியில் தடுமாறி விளைச்சல் குறைய ஏதுவாகும். அல்லது மழை ஏற்படுத்தும் வெள்ளத்தில் அழியும் நிலை ஏற்படும்.

## இதமான காற்றுச் சூழல்

உடல் சங்கடத்தையும், சளைப்புயும் ஆற்றுவது வெளியில் காலத்தில் நல்ல மரநிழல்தான் என்பது நமக்குத் தெரியும். அதுவும் வேப்பமர நிழல் என்றால் மிகவும் விருப்பமானது. ஏனென்றால் அது முதன் முதலாக மிகுந்த மருத்துவ குணம் கொண்டது. வெளியில் நேரங்களில் மிகுந்த ஒளிச்சேர்கை (Photosynthesis) இருக்கும். அப்பொழுது அதிகப்படியான பிராணவாயு (Oxygen) வெளியாகும். வெளியில் நேரத்தில் அந்த வேப்பமரம் அல்லது புங்கமர நிழலில் அமரும்பொழுது முதலில் நமக்குச்சுத்தமான ஆக்ஸிஜன் கிடைக்கிறது. அதை நாம்

சுவாசிக்கும் பொழுது நமது இரத்தநாளங்களும், இதயமும் இதமடைகின்றன.

அப்பொழுது, நல்ல ஆக்ஸிஜன் உள்ளிழுக்கப்படும்போது உடலுக்கு இதமும் சுகமும் கிடைக்கின்றன. அதே நேரத்தில் இலைகளின் நீராவிப்போக்கால் சுற்றுப்புறம் குளிர்ச்சி அடைகின்றது. அதனாலேதான் நாம் மரத்தடியிலே குளிச்சியைக் காண்கின்றோம். மூன்றாவதாக வெயிலையும் இலைகள் மறைத்து, நிழலைத்தருகின்றன. இந்த ஒரு வேப்பமரம் கிட்டத்தட்ட 10டன் AC குளிர்ச்சியைத் தரவல்லது என்றால் பூமியில் காடுகளில் வியாபித்திருக்கும் எண்ணிக்கை செய்ய முடியாத அத்துனை மரங்களும் பூமிக்கு எவ்வளவு குளிர்ச்சியைக் கொடுத்திருக்கும் என்று கணக்கிட்டுப் பாருங்கள்!

(பூமியில் சூடாவது நிலப்பப்பும் உட்கண்டமுமே ஆகும்). புவிவெப்பமயமாவதில் நமது நிலப்பரப்பே அதிக சூரியக்கதிர்களால் பாதிக்கப்பட்டு வெப்பம் கடத்தப்படுகின்றது) அவைகளை நிறைய வளர்ப்பதை விட்டுவிட்டு வெட்டித் தள்ளினால் எப்படி புவி வெப்பமயமாவதைத் தடுக்க முடியும்? இந்தியாவில் சுமார் 30 மில்லியன் வேப்ப மரங்கள் உள்ளன. இந்தியாவில் உத்திரப்பிரதேசத்துக்கு அடுத்தப்படியாகத் தமிழகத்தில்தான் வேம்பு அதிக எண்ணிக்கையில் இருக்கிறது.

வேம்பு மற்றும் புங்கமரங்கள் அளவற்ற நிழல் தந்து நிலச்சூட்டைத் தவிர்ப்பதோடு அவற்றின் இலைகள், எண்ணெய், பிண்ணாக்கு போன்றவை நல்ல உரமாகவும் சித்த மருத்துவப் பொருள்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

வேம்பு அசாடைரக்கடா இன்டிகா (Aiadirachtra indica) என்ற தாவரவியல் பெயருக்கேற்ப, அதிலிருந்து அசாடைரக்டின் (Azadirachtin) என்ற வேதிப் பொருள் மருந்துக்கெனப் பிரித்தெடுக்கப்படுகின்றது. இது விலை உயர்ந்ததாகும். முதல் பிரதானமாகத் தினமும், திரிகடுகம் போன்ற வெண்பா :

நாம்பால் குடிக்கவே நற்காலை சீராக
வேம்பால் துலக்கியே விட்டபின்னர் - தீம்பால்
தனதாக்கித் திப்பிலியும் சுக்கும் மிளகும்
மனதொக்க வாழ்விற் குடித்து

வேப்பங்குச்சியில் பல்துலக்கி, அதிகாலையில் சிறிது சுக்கு மிளகு, திப்பிலி இட்ட காங்கேயம் பசும்பாலை அருந்த வாழ்வு முழுதும் மனதாரப் பழகிக்கொள்ள வேண்டும் என்பது எனது கருத்து.

## அவளவான வெப்பம் :

உடல்முதல், நமது பூமிவரை ஓரளவு வெப்பத்தினைத் தான் தாங்கிக் கொள்ள முடியும். அப்படி வெப்பம் அதிகமாகும்பொழுது நமது உடம்பு அதனை எற்றுக்கொள்ள முடியாமல் சளைத்துச் சோர்வாகி விடுகின்றது. முடிவில் Heat-Sick ஆகி எவ்வளவுபேர் மாநிலங்களில் இறந்துள்ள நிலையைக் கேட்டு நாம் வருத்தமடைகின்றோம். சில மாநிலங்களில் வெப்பம் 125° ஐயும் தாண்டியுள்ளது எதிர்பாராத கொடுமை அது.

இதற்கெல்லாம் மூலக்காரணம் என்னவென்றால், நாம் தாவரங்களை அழித்து, மரங்களை வெட்டித்தள்ளி காடுகளை அழித்து, இயற்கையாகக் கிடைத்த ஆக்ஸிஜனையும், நிழலையும், குளிச்ாச்சியையும் அழித்து விட்டோம். இயற்கையோடு ஒத்துப்போகாமல் சுய AC, வீடுகளில் பொருத்திக் கொண்டு, “மறந்துபோன இயற்கை” என வீடு, தெரு, சாலைகளில் இருக்கும் மரஞ்செடிகளை நடவோ, கண்காணிக்கவோ, வளர்க்கவோ, அவ்வளவாகப் போதிய அளவு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இதன் முடிவுதான்



அளவுற்ற வெப்பம், கொட்டும் மழை, குளிச்சிக்கு நாடு முழுவதும் தாவரவர்க்கங்களைத் தவிர வேறு எதுவும் உதவிசெய்யாது.

தற்போது அசாதாரண நிலைக்கேற்ப, வளரும் தொழிற்சாலைகளின் வெளியீட்டு வெப்பம், AC வெளியீட்டு வெப்பம், வாகனங்களின் வெளியீட்டு வெப்பம் மற்றும் போடப்படும் தார் மற்றும் கான்கிரீட் ரோடு மற்றும் கட்டிடங்களின் பிரதிபலிக்கும் வெப்பம் அனைத்தையும் கணக்கிட்டு, அழித்த மரங்களையும் கணக்கிட்டு, ஒரு மரத்திற்கு 10 டன் AC இழந்தோம் எனக் கணக்கிட்டு உலகளாவிய ஒரு முடிவை நாடுகள் ஒன்று கூடி, தாவர மற்றும் மர அளவு மரங்களுக்கு மேல் 1½ மடங்கு மரங்கள் மற்றும் தாவர இனங்களைப் பெருக்கி சிறுசிறு காடுகளையும் உருவாக்க வேண்டும். இதை விட்டால் புவி வெப்ப மயமாவதற்கு வேறு நிவர்த்தி இல்லை.

## பருவ கால நிலை

இனிதே இயல்பாகவே சரியாகவே பருவ கால நிலை ஓரளவு 2005 வரை இருந்து வந்தது. கால மாதமதம் என்பது கொஞ்சம் கொஞ்சம் தான் இருந்து வந்தது. பின்னர் காற்றுச் சுழற்சி என்ற அடிப்படை வந்தது என்ற கேள்வியைப் பற்றி ஆராயும் பொழுது, உலகளாவிய வெப்பநிலை நாடு தழுவிய வெப்பநிலை போன்றவை உள்வருகின்றன. சிலசமயம் பருவநிலை நீண்டகாலம் தள்ளிப்போகிறது. அல்லது நிர்ணயம் செய்ய முடியாத அளவு உள்ளது.

ஒசோன் படலத்தை மீண்டும் நல்லமுறையில் மீட்டெடுத்தல் மற்றும் பராமரித்தல் என்ற நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். தனித்தனி நாடுகள் விஷயத்தில் அவரவரர்களின் பழைய சூழலியலை (Ecosystem or ecology) மாறாமல் பழைய நிலைக்கே கொண்டுபோகும் பொருட்டான, தொழிற்சாலை வெப்பம் மற்றும் மாசுப்பொருட்கள் வெளியீடு, குளிர்ச்சாதனக் கட்டுப்பாடு, மற்றும் வாகனப் போக்குவரத்து குறைப்பு மற்றும் உற்பத்திக்கட்டுப்பாடு, வாகனங்களை சூரிய சக்தி உற்பத்திக்கட்டுப்பாடு வாகனங்களை சூரிய சக்தியில் ஒட்டுதல் போன்றவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

■

உ



# கொங்கு சமூக ஆன்மீக கல்வி மற்றும் கலாச்சார அறக்கட்டளை, கோயம்புத்தூர்.



## Kongu Social Spiritual Educational & Cultural (KOSSEC) Foundation, Coimbatore.

அன்புடையீர், வணக்கம்

கொங்கு வளநாட்டில் குலதெய்வ வழிபாடு கலாச்சாரம் கொண்ட சமூகம் கொங்கு வேளாளர் சமூகம். ஆன்மீகம், விவசாயம், கல்வி, மருத்துவம், தொழில்துறை, அரசுப்பணி, அரசியல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பாரம்பரிய கலைகள் வளர்ப்பு, சமூக சேவை என பல்வேறு துறைகளில் சிறப்பான வளர்ச்சி, முன்னேற்றம் கண்ட சமூகமாக திகழ்கிறது. கொங்கு சமூக மக்களின் மேம்பாட்டுக்கு சேவைகள் செய்ய, கொங்கு சமூக ஆர்வலர்கள் பலரும் இணைந்து அறக்கட்டளை தொடங்கப்பட்டது. கொங்கு சமூகம் ஆன்மீகம் கல்வி மற்றும் கலாச்சாரம் அறக்கட்டளையின் (KOSSEC Foundation) தலைவராக,

கோவை, பேரூராதீனம்,
**தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார்** அவர்களும்,

துணைத் தலைவராக, கோவை, சிரவையாதீனம்,
**தவத்திரு இராமானந்த குமரகுருபர சுவாமிகள்** அவர்களும்,

உள்ளனர். இந்த அறக்கட்டளையின் சார்பில் இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில் ஆண்களுக்கான கபடி விளையாட்டு போட்டி வருகிற 2024 ஜூலை மாதத்தில் கோயம்புத்தூரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கொங்கு குல தெய்வ கோயில்கள் சார்ந்த பொறுப்பாளர்கள் சுமார் 18–25 வயதுக்குட்பட்ட அந்தந்தக் குலம் சார்ந்த இளைஞர்களைத் தேர்வு செய்து ஒரு கபடிக் குழுவை உருவாக்கலாம். அக்குழுவைப் பதிவு செய்து கொள்ளலாம். போட்டிகளில் கலந்துகொண்டு, வெற்றி பெறும் அணிகளுக்குப் பரிசுகள் வழங்கப்படும். கபடி விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகள் இணைப்பு படிவத்தில் விவரங்கள் பூர்த்தி செய்து, அறக்கட்டளை அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகிகள் தங்களது கருத்துக்கள் தெரிவிக்கலாம்.

**அறக்கட்டளை அலுவலக முகவரி :**

No. 70, கௌமார மடாலயம்,
சின்னவேடம்பட்டி அஞ்சல்,
கோவை - 641049.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண் : 88836 89380**

# திருமண தடை நீக்கும் திருத்தலங்கள்



**நித்ய கால்யாணப் பெருமாள்**
ECR சென்னை



**கருமாரியம்மன்**
திருவேற்காடு



**திருமனஞ்சேரி**
மயிலாடுதுறை



**திருப்பரங்குன்றம்**
மதுரை



**உத்திரகோச மங்கை**
ராமநாதபுரம்

**நம் சொந்தங்கள் திருமண தடைகளை நீக்க மேற்குறிப்பிட்டுள்ள திருத்தளங்களுக்கு சென்று இறைவழிபாடுகளைப் பெற்றுக்கொண்டு தங்கள் மகன், மகளுக்கு திருமண தடை நீங்கி புதுவாழ்வு பெற்றிட வேண்டிக்கொள்கிறோம்.**

# UK கொங்கு குடும்ப விழாவில் சென்னை கொங்கு சொந்தங்கள்













UK கொங்கு குடும்பவிழா மே 25ம் நாள் DAVENTRY நகரில் சீரும் சிறப்புமாக நம் சென்னை
கொங்கு சொந்தங்களுடன் இணைந்து இம்மாபெரும் குடும்பதிருவிழாவில்
தாரைத்தப்பட்டை முழக்க பொழிவேற்ற மாவிளக்குடன் மற்றும் கொங்கு கவுண்டச்சிகள் வண்ணமிக்க
முளைப்பாரியுடன் வள்ளிகும்பி வண்ண நடனங்களுடன் சீரும் சிறப்புமாகு நடைப்பெற்றது.
இத்திருவிழாவில் திருப்பேரூர் ஆதினம் சாந்தலிங்க மருதாச்சல அடிகளாரின் அருளாசி வழங்கினார்.

# கொங்கு நண்பர்கள் சங்கம், சென்னை

பதிவு எண். : 282/76


அலுவலகம் : "வெள்ளிவிழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
: 044-43510460, 63839 85919

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 14.
044-43510460, 63839 85919

"தீரன் சின்னமலை மாளிகை"
72, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை, சென்னை – 14.
044-4266 8046, 93815 45451

www.kongunanbargalsangam.com, e-mail : chennaikongu@gmail.com


## ஆயுள் உறுப்பினர் விண்ணப்பம்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

உ.எண்

புகைப்படம்

பெயர் :

பிறந்த தேதி : வயது :

தகப்பனார் பெயர் :

படிப்பு :

தொழில் :

சொந்த ஊர் : இரத்த வகை (B.Group):

மாவட்டம் : மின்னஞ்சல் (email):

ஜாதி : அலைபேசி எண்:

கூட்டம் / குலம் : தொலைபேசி எண் (வீடு):

குலக் கோயில் :

முகவரி (வீடு) : தொலைபேசி எண் (அலுவலகம்):

முகவரி (அலுவலகம்) :

திருமணம் ஆனவரா ?: ஆம் / இல்லை

குடும்பத்தினர் விவரம்

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மை என உறுதி அளிக்கிறேன்.

மேற்படி சங்கத்தின் ஆயுள் உறுப்பினராக என்னைச் சேர்த்துக்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான சந்தாத் தொகை ரூ. 11,000/– இத்துடன் காசோலை / வரைவோலை (Cheque / DD / RTGS in the Name of "Kongu Nanbargal Sangam" இணைத்துள்ளேன்.

காசோலை / வரைவோலை எண் : தேதி : வங்கி :

ஆயுள் சந்தா விபரம் :

ஆயுள் சந்தா ரூ. 10000/-

ஆயுள் சந்தாவுடன் கட்டிட நிதி ரூபாய் 1000/– செலுத்த வேண்டும்.

உறுப்பினர் படிவத்துடன் ஆதார் அட்டை மற்றும் ஜாதி சான்றிதழ் இணைக்கவேண்டும்.

அறிமுகம் செய்த, சென்னை கொங்கு
நண்பர்கள் சங்க செயற்குழு உறுப்பினர் எண். :

உறுப்பினர் பெயர் :

கையொப்பம் :

உறுப்பினர் ரசீது எண் மற்றும் தேதி :

செயற்குழு ஒப்புதல் நாள் :

**Bank Details**

| | | |
|---|---|---|
| Bank | : | Canara Bank |
| Name | : | Kongu Nanbargal Sangam |
| Account No. | : | 0938101014948 |
| Branch | : | Royapettah |
| IFSC | : | CNRB0000938 |

இடம் :
தேதி :

விண்ணப்பதாரர் கையொப்பம்

தலைவர் / செயலாளர்

# UK கொங்கு குடும்ப விழாவில் சென்னை கொங்கு சொந்தங்கள்








UK கொங்கு குடும்பவிழா மே 26ம் நாள் MANCHSTER நகரில் சீரும் சிறப்புமாக நம் சென்னை கொங்கு சொந்தங்களுடன் இணைந்து இம்மாபெரும் குடும்பதிருவிழாவில் கொங்கு கவுண்டச்சிகள் வண்ணமிக்க முளைப்பாரியுடன் வள்ளிகும்பி வண்ண நடனங்களுடன் சீரும் சிறப்புமாக நடைப்பெற்றது. இத்திருவிழாவில் சென்னை கொங்கு சொந்தங்களுடன் சங்கத்தின் தலைவரும், செயற்குழு உறுப்பினர்களும் மற்றும் உறுப்பினர்களும் கலந்துக்கொண்டும் திருப்பேரூர் ஆதினம் சாந்தலிங்க மருதாச்சல அடிகளாரின் அருளாசியுடன் இவ்விழாவினை சிறப்பித்தார்கள்

# மணமகள் தேவை



| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர்/உயரம் | : | E.குமரவேலு |
| பிறந்த தேதி | : | 27-06-1997 |
| பிறந்த நேரம், இடம் | : | 12:55 am, சேலம் |
| நட்சத்திரம் / இராசி | : | பூரட்டாதி 4 / மீனம் |
| தந்தை பெயர் | : | திரு. C.ஈஸ்வரமூர்த்தி |
| தாயார் பெயர் | : | திருமதி E.வனிதா |
| குலம் | : | காரி |
| உடன் பிறந்தோர் | : | ஒரு தம்பி |
| உயரம் | : | 171 cm |
| படிப்பு | : | B.E.,(Civil) |
| தொழில் | : | Civil Engineer (Business - Flour / Oil Mill) |
| மாத வருமானம் | : | Rs.50,000/- per month |
| சொத்து மதிப்பு | : | நேரில் |
| உகந்த மணமகள் | : | நல்ல குடும்பம் / Degree |
| ஜாதக குறிப்பு | : | 7 ல் செவ்வாய் |
| தொடர்புக்கு | : | 80124 44042, 94426 86191 |

| | | | |
|---|---|---|---|
| 1–லக் சந் சனி | | மாந் | புத சூரி |
| கேது | இராசி | | சுக் |
| குரு(வ) | | | ராகு |
| | | மாந் | செவ் |

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | கேது |
| சனி 1–லக் | நவாம்சம் | | சந் |
| சூரி புத மாந் | | | சுக் |
| ராகு | | | குரு(வ) |

# மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர்/உயரம் | : | K.சரவணன் |
| பிறந்த தேதி | : | 05-03-1996 |
| பிறந்த நேரம், இடம் | : | 08:46 am, சென்னை |
| நட்சத்திரம் / இராசி | : | பூரம் / சிம்மம் |
| தந்தை பெயர் | : | திரு. C.கிருஷ்ணன் |
| தாயார் பெயர் | : | திருமதி K.செல்வி |
| குலம் | : | கண்ணன் குலம் |
| உடன் பிறந்தோர் | : | அக்கா (சுபம் – ஈரோடு) |
| உயரம் | : | 183 cm |
| படிப்பு | : | B.E., MS (USA) |
| தொழில் | : | Blue Triton Brands (Nestle)<br>Senior Business System Analyst |
| மாத வருமானம் | : | Rs.11,45,000/- per month |
| சொத்து மதிப்பு | : | நேரில் |
| உகந்த மணமகள் | : | நல்ல குடும்பம் / Degree |
| ஜாதக குறிப்பு | : | சுத்த ஜாதகம் (தோசம் இல்லை) |
| தொடர்புக்கு | : | 9444909346, 9941471488 |



| | | | |
|---|---|---|---|
| சனி<br>கேது | சுக்<br>லக் | | மாந் |
| சூரி<br>செவ்<br>புத | இராசி | | |
| | | | சந் |
| குரு | | | ராகு |

| | | | |
|---|---|---|---|
| | சூரி<br>செவ்<br>லக் | சுக் | |
| கேது<br>மாந் | நவாம்சம் | | சனி |
| | | | ராகு |
| | | புத | சந்<br>குரு |

## மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 101 | M.ஆதிஸ்ரீ | காடை | 26-01-1999<br>கிருத்திகை | BBA., BL | Advocate | கோபி<br>03.31 pm | 94441 70271 |
| 102 | R.S.நிவேத்தா | கண்ணந்தை | 18-10-1993<br>அனுசம் | B.E., MS<br>(USA) | Software (Amazon) | கோவை<br>06.40 am | 97895 33476 |
| 103 | K.மஞ்சரி | கண்ணன் | 11-02-1998<br>மகம் | ME, Bio-Medical<br>Engineering | Programme Analyst | சென்னை<br>01.38 am | 94438 77850<br>94875 91834 |
| 104 | ரித்தி செரா | மணியன் | 27-07-2001<br>சுவாதி | B.Tech., (IIT) Jodhpur<br>M.Eng. UC (Berkelay) USA | Data Analyst, Medtronic,<br>Denver, Co. USA | ஈரோடு<br>12.18 pm | 98848 10040<br>82482 24719 |
| 105 | M.ஞானதீபிகா | காரி | 15-09-1997<br>அவிட்டம் | BBA., LLB<br>(Hons) ACS | Ernst & Young<br>(Chennai) | ஈரோடு<br>08.44 am | 98408 90034<br>90430 90035 |

## மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 89 | S.தர்ஷன் | பண்ணை | 04-02-1997<br>மூலம் | B.E., (ECE)<br>PG, DSE | Amazon<br>Quality Analyst | தாம்பரம்<br>04.20 am | 94444 41967 |
| 90 | P.V.விவேகானந்தன் | கண்ணன் | 14-06-1996<br>ரோகிணி | B.Tech., (Mech)<br>MS (IT) | Software Engineer<br>(Australia) | ஈரோடு<br>04.49 pm | 94441 51015<br>99429 18333 |
| 91 | E.அருள்முத்துசாமி | பெரியகுலம் | 01-03-1997<br>அனுசம் | B.E., (ECE) | Software<br>Zoho-Chennai | ஈரோடு<br>02.10 pm | 98427 44429 |
| 92 | M.ஆதித்யா | கண்ணன் | 28-07-1999<br>உத்திராடம் | B.Tech., MS<br>(Ph.D.) | Researcher<br>(Califorina-USA) | ஈரோடு<br>06.44 am | 89036 41238<br>89030 01025 |

## திருத்தம்

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் /நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 88 | A.ஆதவன் | பயிரன் | 31-05-1997<br>உத்திரட்டாதி | B.Tech., (Mech)<br>MS (IE) USA | Engineering<br>Performance<br>Manager, CSL Behrin<br>Chicago, USA | கோவை<br>04.46 pm | 99944 26711<br>96557 68177 |

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

## சங்கத்தின் உறுப்பினர்களுக்கு விலாசம் மாற்றம் வேண்டுகோள் ! கவனத்திற்கு

அன்புடையீர்,

நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினர்களின் கவனத்திற்கு! மாதந்தோறும் நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திலிருந்து மாத மலர் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இதில் சுமார் 400 புத்தகங்கள் விலாசம் மற்றும் அலைபேசி எண். தவறாக இருப்பதாலும், சங்கத்திற்கு திரும்ப வந்துவிடுகிறது. ஆகையால் உறுப்பினர்கள் இந்த படிவத்தில் உறுப்பினரின் சரியான உறுப்பினர்எண், விலாசம், மின்னஞ்சல், அலைபேசி எண் ஆகியவற்றை பூர்த்தி செய்து சங்கத்திற்கு அனுப்பு வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் உறுப்பினராக விரும்பும் சொந்தங்கள் கொங்குநண்பர்கள் சங்கத்தின் www.kongunanbargalsangam.com இணையதளத்தில் Membership Form Download செய்து தங்களுக்கு தெரிந்த சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற்று சங்க விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அதற்குண்டான தொகை காசோலையாகவோ, பணமாகவோ படிவத்தில் உள்ள வங்கிகணக்கிற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### விலாசம் மாற்றம்

| **Old Address :** | **New Address :** |
|---|---|
| Membership No. | Membership No. |
| Name | Name |
| Address | Address |
| Cell | Cell |
| Mail ID | Mail ID |

**மலர் பெறாதவருக்கு :**

தாங்கள் விலாசம் மாற்றம் செய்திருந்தாலும், தொலைபேசி எண். மற்றும் மின்னஞ்சல் மாற்றம் செய்திருந்தாலும், இந்த படிவத்தின் மூலமாக பூர்த்தி செய்து சங்கத்தின் அலுவலகத்திற்கு பதிவேற்றத்தில் சேர்த்து புதுப்பிக்க கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் காலமாண உறுப்பினர் அவருடைய வாரிசுதாரர்கள் உறுப்பினர் எண்ணையும், தொலைபேசி எண், மின்னஞ்சல் போன்வற்றை சங்கத்திற்கு தெரியப்படுத்தவும்

**பெறுநர்,**

“வெள்ளி விழா இல்லம்” 34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை – 600 014. போன் : 044–4351 0460, 63839 85919
மின்னஞ்சல் : chennaikongu@gmail.com

# ஆயூர்வேதத்தில் சொல்லும் அழகுக் குறிப்புகள்



## இயற்கையான சன்ஸ்கிரீன்...

வெயில் நாள்களில் சருமம் கறுத்துப்போவது இயல்பானது. அதிலிருந்து சருமத்தைக் காப்பாற்ற, சன் ஸ்கிரீன் பயன்படுத்துவது நல்லது. வெயிலால் ஏற்படும் ஒவ்வாமையிலிருந்து தப்பிக்கவும் சன்ஸ்கிரீன் உதவும். சிலருக்கு கடைகளில் கிடைக்கும் சன்ஸ்கிரீன் உபயோகிக்கப் பிடிக்காது. அவர்கள் வீட்டிலேயே கிடைக்கும் இயற்கையான பொருள்களை சன் ஸ்கிரீனாக பயன்படுத்தலாம்.

நாம் கடைகளில் வாங்கிப் பயன்படுத்தும் சன்ஸ்கிரீனை காட்டிலும் அதிக பலன்களைத் தரக்கூடியது தேங்காய் எண்ணெய். சுத்தமான, கலப்படமில்லாத தேங்காய் எண்ணெயை சில துளிகள் எடுத்து முகத்தில் தேய்த்து முகம் கழுவினாலே சன்ஸ்கிரீன் பயன்படுத்துவதற்கு இணையான பலன்கள் கிடைக்கும். அதே போல தேங்காய்ப்பால் எடுத்து ஃப்ரீஸரில் உறையவைத்து அதை முகத்தில் தேய்த்துக் கழுவினாலும் சன்ஸ்கிரீன் பயன்படுத்தியது போன்ற பலன்கள் கிடைக்கும்.

## வருந்துகிறோம்



நமது சங்கத்தின் **2021** ஆம் ஆண்டுக்கான கொங்கு சாதனையாளருமான மற்றும் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி மஞ்சக்காட்டுவலசு கிராமத்தில் Retd. Customs Superintendent திரு. பி.குமாரசாமி – திருமதி. கே.லஷ்மி தம்பதியருக்கு தூரன் குல மகனான திரு.எம்.கே.சிவபால் **24/05/2024** அன்று காலை இயற்கை எய்தினார். அன்னாரது குடும்பத்தாருக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# கொங்கு உறவே புதுப்பித்துக் கொள்வோம்!

ஒன்றை நீங்கள் பயன்படுத்தவில்லை என்றால்,
இழக்கத்தான் வேண்டும்.,

பயன்படுத்தாத பணம் அதன்மதிப்பை இழக்கிறது.,
பயன்படுத்தாத திறமை மங்கிப் போகிறது., பயன்படுத்தாத
ஆற்றல் குறைந்து விடுகிறது.,

பயன்படுத்தாத கருவிகள் துருபிடித்து விடுகின்றன.,
பயன்படுத்தாத நேரம் காணாமல் போய்விடுகிறது., பயன்படுத்தாத
அறிவு சுமையாகி போகிறது.,

பயன்படுத்தாத உறவு கேள்விக்குறியாகிறது.,
பயன்படுத்தாத தோழமை தோற்றுப் போகிறது.,
.
எனவே பயன்படுத்தாத அனைத்தும் முறை தவறி போய்விடுகின்றன
எனவே எவற்றையும் பயன்படுத்திக் கொண்டே இருங்கள்.,

அது உறவாக இருந்தாலும் சரி., திறமையாக இருந்தாலும் சரி.,
நட்பாக இருந்தாலும் சரி.,
ஆற்றலாக இருந்தாலும் சரி..!!

ஒருவனின் அவல நிலை என்பது அவன் இறந்து விடுவதால் வருவது அல்ல.,

அவன் உயிரோடு இருக்கும்போது அந்த வளங்கள்
பயன்படுத்தாமலே மடிந்து போவது தான் பெரும் அவலமான நிலை.,
துன்பமான நிலை.,

ஆகவே உங்களுடைய திறமைகளை நீங்கள் பயன்படுத்துங்கள்..!!
புதுப்பித்துக் கொள்ளுங்கள்..!! செம்மைப்படுத்துங்கள்.!!

வெற்றிகள் தானாய் வந்து உங்களிடம் குவியும்..!!
பயன்பட்டும் வாழ் ..!!
**மகிழ்வித்து ஆனந்தமாய் இருப்போம்**
**கொங்கு இனத்தை மேம்படுத்திக்கொள்வோம்.**

**– கொங்கு படித்ததில் பிடித்தது....**





# என்றும் நலமுடன் வாழ!

## சில மறதி நோய்களும் குணப்படுத்தக்கூடியதே!

பத்மஸ்ரீ கொங்குமாமணி டாக்டர் வி.எஸ்.நடராஜன்
முதியோர் நல மருத்துவர், சென்னை

மறதி நோயில் இரண்டு வகைகள் உண்டு.

❖ **ஒன்று : காரணமின்றி ஏற்படும் டிமென்சியா** (Alzheimer's Disease)

இந்நோய்க்கான காரணம் தெரியாததால் அதற்கு தக்க சிகிச்சையுமில்லை. அதை பூரணமாகவும் குணப்படுத்த முடியாது.

❖ **இரண்டு காரணங்களினால் ஏற்படும் டிமென்சியா**

ஒரு சில காரணங்களினால் டிமென்சியா ஏற்பட்டால் அக்காரணத்திற்குண்டான சிகிச்சையளித்தால் டிமென்சியா குணம் அடைய வாய்ப்பு உண்டு.


**அவைகளின் வகைகள் பின்வருமாறு :**

**மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் பாதிப்பு**

மூளையில் இரத்த கசிவோ அல்லது இரத்த ஓட்டம் தடைபட்டாலோ, பக்கவாதம் போன்ற தொல்லைகள் ஏற்படலாம். பக்கவாதம் ஏற்பட்டு சில மாதங்கள் கழித்து அவர்களுக்கு டிமென் வர வாய்ப்பு உண்டு. (Vascular Dementia) இத்தொல்லை கீழ்கண்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட வாய்ப்பு அதிகம் உண்டு. உதாரணம்: நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம், உடற்பருமன், இரத்தத்தில் அதிக கொழுப்பு சத்து, புகை பிடித்தல். இந்நோய்களுக்கு தக்க சிகிச்சையளித்தால் டிமென்சியா குணமாகும்.

**மூளையில் கட்டி அல்லது இரத்தக்கட்டி**

மூளையில் தோன்றும் சாதாரண, மற்றும் புற்றுநோய் கட்டிகளினாலும் டிமென்சியா வரலாம் முதியவர்கள் அடிக்கடி கீழே விழ வாய்ப்புண்டு. தலையில் லேசாக அடிப்பட்டாலும் மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு அது கட்டியாக உறைந்து விடும். இதை மூளை ஸ்கேன் மூலம் எளிதில் கண்டுபிடித்து சிறு அறுவை சிகிச்சை மூலம் இரத்தக் கட்டியை அகற்றி விட்டால் பூர்ண குணம் கிடைக்கும்.



### அதிக மது அருந்துதல்

பல மாதங்கள் அல்லது வருடங்கள் தொடர்ந்து அதிகமாக மது அருந்துபவர்க்கு டிமெசியா நோய் வர வாய்ப்பு அதிகம் உண்டு, மதுவை நிறுத்தி விட்டு, வைட்டமின் மாத்திரைகளை எடுத்துக் கொண்டால் நினைவாற்றல் திரும்பும்.

### தைராய்டு சுரப்பி குறைவாக சுரத்தல்

வயதான முக்கியமாக பெண்களுக்கு தைராய்டு சுரப்பி குறைவாக சுரக்க வாய்ப்புண்டு, இவர்களுக்கு இரத்த பரிசோதண் மூலம் இந்நோய் உறுதி செய்யப்பட்டு தொடர்ந்து சிகிச்சை எடுத்துக் கொண்டால் டிமென்சியா குறைய வாய்ப்புண்டு.

### வைட்டமின் குறைவு

வைட்டமின் பி1 மற்றும் பி12 இரத்தத்தில் குறைந்தால் டிமென்சியா வர வாய்ப்புண்டு. இத்தொல்லை உள்ளவர்களுக்கு வைட்டமின் பி1 (தையமின்), பி6 (ஃபோலிக் ஆசிட்), பி12 கலந்த மாத்திரையை தொடர்ந்து கொடுத்தால் டிமென்சியா வராமல் தடுக்க முடியும்.

### உறுப்புகள் செயலிழத்தலின் விளைவு

கல் ஈரல் மற்றும் சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்கும் டிமென்சியா வரலாம். தொடர்ந்து சிறுநீரக டையாலிசிஸ் செய்து கொள்வோருக்கும் இந்நோய் வர வாய்ப்புண்டு.

### மருந்துகள்

தூக்க மாத்திரை, மனநோய்க்கு கொடுக்கும் மாத்திரைகளை அதிக நாள் சாப்பிடுவதினாலும் டிமென்சியா வரலாம். இம்மாத்திரைகளை குறைத்தோ அல்லது நிறுத்தியோ சிகிச்சையளித்தால் டிமென்சியா குறைய வாய்ப்புண்டு.

### மனச்சோர்வு

நாள்பட்ட மனச்சோர்வு உள்ளவர்க்கும் டிமென்சியா வரலாம்.

மறதி நோய் என்றால் பயப்பட வேண்டாம். மறதி நோய்க்கான காரணம் கண்டறியப்பட்டால், அதற்கு தக்க சிகிச்சை அளித்து மறதி நோயிலிருந்து மீள முடியும்.



# சோழர் காலத்தில் கொங்கு நாட்டின்
# தலைநகர் சங்ககிரி

**ஊர் பெயர் வந்த விதம்**

சங்ககாலம் முதல் கி.ப.1522 வரை இவ்வூராணது குன்றத்தூர் என்றேழைக்கப்பட்டது. இவ்வூரைச் சுற்றி மங்கமலை, ஒருக்காமலை, மோரூர், திருச்செங்கோடு மலை குன்றுகள் மற்றும் சூரிய மலை ஆகிய குன்றுகள் சூழ்ந்துள்ள பகுதியில் அமைந்துள்ளதால் “குன்றத்தூர்” என்றழைக்கப்பட்டது.

கி.பி.16 ஆம் நூற்றாண்டு துவக்கத்தில் விஜயநகரப்பேரரசு தமிழகத்தில் பல மலைக்கு கோட்டைகளைக் கட்டினார்கள், அவற்றில் ஒன்றுதான் சங்ககிரி மலைக்கோட்டை, சங்ககிரி போல சங்குபோல் அமைந்துள்ளதாலும், கிரி என்பது மலையையும் துர்க்கம் என்றால் கோட்டை எனவும் பொருள்படும் எனவே இந்த குன்றத்தூரானது “சங்ககிரி துர்க்கம் என்று கி.பி.1522 முதல் அழைக்கப்பட்டது.

தஞ்சை சோழர் காலத்தில் கொங்குநாட்டை வேளாண் மண்லமாக மாற்றும் பொருட்டு வெளிப்பகுதிகளில் இருந்து விவசாய பெருமக்களை வரவழைத்து இங்கு வேளாண் பணிகளில் ஈடுபட வைத்தனர். அப்போது நாட்டுப்பிரிவகுளை மண்டலம் வளநாடு, கூற்றம் என பிரித்தனர்.

இந்த வகையில் குன்றத்தூர் கூற்றம் என சங்ககிரி பகுதி மாற்றினர். கொங்கு நாட்டின் 24 நாட்டுப் பாடல்கள் குன்றத்தூர் சூழ்நாடு முதன்மையாக விளங்குகின்றது.

கி.பி.1522 ல் சங்ககிரி என பெயர் மாற்ற செய்யப்பட்டாலும் மக்கள் மனதில் இப்பெயர் அவ்வளவு எளிதாக பதியவில்லை. கி.பி.16 ஆம் நூற்றாண்டில் திருச்செங்கோடு மலைக்கல்வெட்டுகளில் “குன்றத்தூர் கூற்றம், குன்றத்தூர் துர்க்கம், குன்றத்தூர் சீர்மை” என்றே குறிப்பிடப்படுகின்றது. திருச்செங்கோடு குமாரமங்கலம் தூரன் குல செப்பேடுகளில் 14,15 வரிகளில் குன்றத்தூர் கூற்றம் என்றழைக்கப்படுகின்றது. மதுரை நாயக்கர் ஆட்சியில் திருச்செங்கோடு வேட்டுவ குல செப்பேடு கி.பி.1584 இல் வெளியிடப்பட்டது. மற்றும் கி.பி.1633 இல் வெளியிடப்பட்ட நெய்வேலிச் செப்பேடுகளிலும் குன்றத்தூர் துருகம் என்றே குறிப்பிடப்படுகின்றது.

பருத்திப்பள்ளியில் உள்ள உம்மத்தூர் அரசாங்க கல்வெட்டில் சங்ககிரியை “ஸ்வாதபுரம்” என்று கூறுகின்ற கி.பி.1717ல் வெளியிடப்பட்ட சங்ககிரிதாமிர செப்புப் பட்டயத்தில் அபராஜித கிருஷ்ணராஜபுரம் என்றும் மேற்கு ஸ்ரீரங்கம் என்று வர்ணிக்கின்றது மாவீரன் திப்பு சுல்தான் சங்கிரியை முஸ்பரபாத் என அழைத்தார். (1784 – 86)

கி.பி.1792 இல் ஆங்கிலேயர் ரீடு காலத்தில் “சங்ககிரி துர்க்கம் என்றழைக்கப்பட்டது. 19 ஆம் நூற்றாண்டு இறுதி, 20ம் ஆம் நூற்றாண்டு துவக்கத்தில் செங்ககிரி என்று அழைக்கப்பட்டது.



## சங்ககிரி கொங்குநாட்டின் தலைநகரமாக மாற்றம் :

தஞ்சை சோழர், கொங்குசோழர், மதுரை பாண்டியர், கொங்குபாண்டியர் ஹொய்சாளர்கள், விஜயநகர், மதுரை நாயக்கர், மைசூரு உடையார், தளவாய் மற்றும் ஆங்கிலேயே கிழக்கிந்திய கம்பெனி ஆட்சிவரை 11 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 1800 வரை சுமார் 800 ஆண்டுகள் தலைமை தலைநகராக விளங்கியது. ஆட்சித் தலைவர்கள் ஏன் சங்ககிரியை தலைமை நகராக ஏற்றுக் கொண்டதற்கு சில காரணங்களை இங்கு காண்போம்.

1. முதன்முதலாக இங்குள்ள சங்கிரி மலைக்குன்று சுமார் 2345 அடி உயரம் கொண்டது. இம்மலையின் உச்சியிலிருந்து பார்த்தால் தெற்கே கொடைக்கானல் மலை, மேற்கே மேற்கு தொடர்ச்சி மலை, தலைமலை வடக்கே தொப்பூர் குன்றுகள், கிழக்கே கொல்லிமலை சேர்விராயன் மலைகள் ஆகிய கொங்கு நாட்டு எல்லைகள் தெளிவாக தெரிவது.
2. இம்மலை உச்சியிலிருந்து பார்க்கும் போது சுமார் 50 மைல் தூரத்தில் இருந்து வரும் எதிரி படைகளின் வருவதை தெளிவாகக் காணலாம்.
3. இம்மலையில் கீழிறிற்று மேலாக சுமார் 10 கோட்டை அரண்கள் நுழைவு வாயிலுடன் கட்டப்பட்டுள்ளது. இக்கோட்டை வாயில் வழியாகத்தான் மலைமேல் செல்ல முடியும். வேறு எந்த பக்கமும் இம்மலை மேல் ஏறவே முடியாது அவ்வளவு வலிமையாக இக்கோட்டைகள் கட்டப்பட்டுள்ளது.
4. இம்மலைமேல் உள்ள தானியக் கிடங்குகள், எண்ணெய் சேமிப்பு அறைகள் சுமார் ஓர் ஆண்டுக்கு படைவீரர்களுக்கு தேவையான அளவு இன்டுசேமிக்க வசதி உள்ளது.
5. இம்மலை உச்சிக்கு யானைகளும், குதிரைகளும் மேலே செல்ல முடியாது.
6. இம்மலைமேல் உச்சியில் தனியாக தீவுத்திடல் போன்ற பகுதி மேற்குப்பகுதியில் அமைந்துள்ளது. இங்குதான் சிறைச்சாலை மற்றும் தூக்கு மேடை இருந்துள்ளது. இங்கு பாண்டியர் காலத்தில் வாண் கோவரையன், மதுரை நாயக்கர் காலத்தில் வரி கொடுக்காத பழைய கோட்டை சர்க்கரை சம்மந்தம் மன்றாடியார், திப்பு சுல்தான் காலத்தில் மல்லசமுத்திரம் தொண்டைமான் மன்றாடியார், தாரமங்கலம் கெட்டி முதலி அரசர்கள், மற்றும் ஆங்கிலேயர் காலத்தில் நமது தமிழகத்தின் கடைசி சுதந்திர போராட்ட வீரரருமான “தீரன் சின்னமலை”யும் இங்குதான் சிறையிலடைக்கப்பட்டனர். தற்போது இங்கு சிறைச்சாலை இருந்ததற்கான தடயங்கள் உள்ளன.



7. இம்மலைமேல் அரண்மனை, கஜானா மண்டபம் கண்காணிப்பு மண்டபங்கள், ஆகியன இருந்தன. மதுரை நாயக்கர், மைசூரு உடையார் திப்புசுல்தான் காலத்தில் மொத்த கொங்குநாட்டு வரிவசூல் பாளையக்காரர்கள் மூலமாக இங்குதான் வசூலிக்கப்பட்டு பேரரசர்களுக்கு அனுப்பப்படும். ஒரு முறை ஹைதர் அலி ஹைதராபாத் நிஜாம் அரசரிடமிருந்து பெற்ற தங்க நாணயங்களை 15 ஒட்டகங்கள் மூலமாக இங்கு கொண்டு வந்து மலை மேல் பதுக்கி வைத்தார்.
8. இம்மலைக் கோட்டைக்கு மோரூர் காங்கியே சிற்றரசர் மற்றும் தாரமங்கலம் கெட்டி முதலி அரசர்கள் ஆகியோர் மிகவும் பாதுகாப்பு உடன் மற்றும் பராமரிப்பு பணிகளை செய்து வந்தனர்.
9. இவ்வூருக்கு முன்பு வலிமையான நகரக்கோட்டை ஒன்று இருந்துள்ளன. இக்கோட்டைக்குள்தான் மக்கள் குடியிருப்புகள் இருந்துள்ளன. இக்கோட்டை 1850க்குப்பின் இடிக்கப்பட்டு விட்டது.
10. சங்ககிரிமலைக்கு வடகிழக்கே சுமார் 5கி.மீ தொலைவில் சங்ககிரி பழைய துர்க்க மலை என்ற சிறிய குன்று உள்ளது. இக்குன்றின் மேல் ஓர் வட்ட வடிவ கோட்டை இருந்தது தற்போது சிதிலமடைந்து விட்டது. இக்கோட்டையும் இராணுவ தளவாடங்கள் வைப்பதற்கு வீரரர்களால் பயன்படுத்தப்பட்டது.

மேற்கண்ட இத்தகைய காரணங்களினால்தான் சங்ககிரியை கொங்கு நாட்டின் தலைநகரமாக அரசர்கள் ஏற்றுக் கொண்டனர்.

நன்றி,

டி.கே.ராஜேஸ்வரன் BA.,BL
S/o. தெய்வத்திரு. காளியண்ணன்
– கே.கருணாகரன் MA.,